மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராணிப்பேட்டை.
முன்னிலை: திருமதி.ச.பூர்ணிமா, எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 46/2025

**CNR.No.TNRP04-000745-2025**

**PARTICULARS UNDER RULE 106 OF CRIMINAL RULES OF PRACTICE, 2019:-**

| | | |
|---|---|---|
| 1. | Name of Police Station and the Crime Number of the offence | Ranipet Police Station Crime No.170/2021 |
| 2. | Name | Kumaresan |
| 3. | Father/Husband Name | S/o.Sugumar |
| 4. | Occupation | - |
| 5. | Residence | 45 D, Bajanai koil Street, Velam Puthur Village, Sholinghur TK, Ranipet. |
| 6. | Age | - |
| 7. | Date of Occurrence | 23.04.2021 |
| 8. | Date of Complaint | 23.04.2021 |
| 9. | Date of Apprehension | 23.04.2021 |
| 10. | Release on bail | 29.04.2021 |
| 11. | Commitment | - |
| 12 | Commencement of Trial | 03.02.2026 |
| 13 | Closure of Trial | 06.03.2026 |
| 14 | Sentence or Order | 11.03.2026 |
| 15 | Service of copy of Judgment or finding on accused | Acquitted |
| 16 | Explanation of delay | No delay |



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
ராணிப்பேட்டை காவல் நிலையம்,
குற்ற எண். 170/2021 ... குற்றமுறையிடுபவர்

எதிராக

குமரேசன்
த.பெ.சுகுமார்
நெ.45 டி, பஜனை கோயில் தெரு,
வேலம் புதூர்,
சோளிங்கர் தாலுக்கா,
இராணிப்பேட்டை.

... எதிரி

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் 28.03.2025 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை I அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாபு அவர்களும் முன்னிலையாகி நடைபெற்ற வழக்கில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கு கு.வி.மு.ச பிரிவு 173(2) ன் கீழ் ராணிப்பேட்டை காவல் ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். கடந்த 23.04.2020 ம் தேதி காலை சுமார் 06.00 மணிக்கு ராணிப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வேலம் புதிய காலணி பஸ் ஸ்டாப்பிடம் எதிரி TN 05 R 0839 என்ற ASHOK LEYLAND லாரியில் சுமார் 2 யூனிட் ஏரிமண் வேலம் ஏரியில் இருந்து எந்தவித அரசு அனுமதியின்றி திருடுவதால்

 Tmt.S.Poornima,
DM-cum-JM, Ranipet

இயற்கை கனிமவளம் மற்றும் நீர் ஆதாரம் பாதிக்கும் என்று தெரிந்தே அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி தான் பணம் சம்பாதித்து லாபம் அடைய வேண்டும் என்ற உள்நோக்கத்தில் எதிரி வேலம் ஏரியில் இருந்து ஏரிமண்ணை திருடி எடுத்து வந்துள்ளதாக எதிரி மீது இதச பிரிவுகள் 379, 430ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கானது கோப்புக்கு எடுக்கப்பட்டவுடன் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பபட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானார். எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட வேண்டிய நகல்களை இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரி குற்றம் செய்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 379, 430 ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்களை பற்றி விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார்.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சான்று பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்**

**இருசப்பன்** – தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது இராணிப்பேட்டை நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 23.04.2023 அன்று இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளராக

பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் சீனிவாசன் தலைமையில் தானும், முதல்நிலை காவலர் சரவணன் என்பவரும் மணல் திருட்டு தொடர்பாக கிடைத்த தகவலின் அடிப்படையில் வேலம் புதிய காலாணி பேருந்து நிலைம் அருகே சென்ற போது அசோக் லைலண்ட் TN 05 R 0839 என்ற வாகனத்தில் 2 யூனிட் ஏரிமண் கடத்தி வந்தவரை பிடித்து விசாரணை செய்த போது அவர் பெயர் குமரேசன் என்றும் வேலம் கிராமத்தை சேர்ந்தவர் என்றும் தெரிவித்தார் என்றும், அவரை பிடித்து விசாரணை செய்த போது மணல் திருடியதாக ஒப்புக்கொண்டார்கள் என்றும், அப்போது உதவி ஆய்வாளர் சீனிவான் அவர்கள் பார்வை மகசர், மாதரி வரைபடம் தயார் செய்தார் அதில் தான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், அந்த பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் **அ.சா.ஆ.1** ஆகும். மணல் ஏற்றி வரப்பட்ட வாகனம் மற்றும் மணலை கைப்பற்றி கைபற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும், அதற்கு தான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், அந்த கைபற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.2** என்றும், அவ்வாறு கைப்பற்றப்பட்ட மணலில் 1கி.கி. மாதிரிக்காக எடுத்துக் கொண்டு மற்ற மணலை வேலம் ஏரியில் கொட்டி அழிப்பு மகசரை உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றும், அவ்வாறு தயார் செய்த அழிப்பு மகசரில் தான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்பு கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு

செய்தார் என்றும், அவருக்கு துணையாக தான் இருந்ததாகவும், வழக்கு தொடர்பாக உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.2 சரவணன்–** தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது திமிரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருவதாகவும், கடந்த 23.04.2023 அன்று இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் சீனிவாசன் தலைமையில் தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் இருசப்பன் என்பவரும் மணல் திருட்டு தொடர்பாக கிடைத்த தகவலின் அடிப்படையில் வேலம் புதிய காலாணி பேருந்து நிலைம் அருகே சென்ற போது அசோக் லைலண்ட் TN 05 R 0839 என்ற வாகனத்தில் 2 யூனிட் ஏரிமண் கடத்தி வந்தவரை பிடித்து விசாரணை செய்த போது அவர் பெயர் குமரேசன் என்றும் வேலம் கிராமத்தை சேர்ந்தவர் என்றும் தெரிவித்ததாகவும், அவரை பிடித்து விசாரணை செய்த போது மணல் திருடியதாக ஒப்புக்கொண்டார்கள் என்றும், அப்போது உதவி ஆய்வாளர் சீனிவாசன் அவர்கள் பார்வை மகசர், மாதரி வரைபடம் தயார் செய்தார் அதில் தான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், அந்த பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் **அ.சா.ஆ.4** ஆகவும், மணல் ஏற்றி வரப்பட்ட வாகனம் மற்றும் மணலை கைபற்றி கைபற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும், அதற்கு தான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், அந்த கைபற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.சா.ஆ.5** என்றும், அவ்வாறு கைப்பற்றப்பட்ட மணலில் 1கி.கி. மாதிரிக்காக எடுத்துக் கொண்டு மற்ற மணலை வேலம்



Tmt.S.Poornima,
DM-cum-JM, Ranipet

ஏரியில் கொட்டி அழிப்பு மகசரை உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றும், அவ்வாறு தயார் செய்த அழிப்பு மகசரில் தான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்பு கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும், அவருக்கு துணையாக தான் இருந்ததாகவும், வழக்கு தொடர்பாக உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.3 பாலமுருகன்–** தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது சிறப்பு உதவி ஆய்வளராக ராணிப்பேட்டை காவல் நிலையத்தில் பணி புரிந்து வருவதாகவும், உதவி ஆய்வாளர் திரு.சீனிவாசலு என்பவரின் கையெழுத்து தனக்கு நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் அவருக்காக தான் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 23.04.2021 அன்று காலை 06.00 மணியளவில் இராணிப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. சீனிவாசலு அவர்களின் நிலைய பொறுப்பில் இருந்த போது அவரும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.இருசப்பன் மற்றும் முதல் நிலை காவலர் சரவணன் ஆகியோருடன் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற தடுப்பு தொடர்பாக இராணிப்பேட்டை வேலம் புதிய காலணி பேருந்து நிறுத்தம் அருகே கண்காணித்து கொண்டு சென்ற போது எதிரே வந்த அசோக் லைலாண்ட் லாரி TN 05 R 0839 பதிவெண் கொண்ட வாகனத்தை நிறுத்த முற்பட்ட போது அதிலிருந்து ஒரு நபர் இறங்கி ஓடிவிட்டார் என்றும், பின்பு அவரை

பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயர் குமரேசன் என்று தெரிவித்துள்ளதாகவும், அவர் ஓட்டி வந்த வாகனத்தில் அரசு அனுமதியில்லாமல் வேலம் ஏரியிலிருந்து மண்ணை திருடி வந்ததாக ஒப்புக்கொண்டவரை காலை 06.05 மணியளவில் காரணம் கூறி கைது செய்துள்ளதாகவும், பின்பு அவர் ஓட்டி வந்த லாரியிலிருந்த 2 யூனிட் ஏரி மண் மற்றும் லாரியை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் அவருடன் சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் இருசப்பன் மற்றும் முதல் நிலை காவலர் சரவணன் ஆகியோருடன் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளதாகவும், அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது என்றும், பின்பு அதே சாட்சிகள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.8 மற்றும் 9 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்பு அதே சாட்சிகள் முன்பு காலை 09.00 மணியளவில் கைப்பற்றப்பட்ட 2 யூனிட் ஏரி மண்ணை வேலம், புதூர் ஏரியில் கொட்டி அழிப்பு மகசர் தயார் செய்துள்ளார் என்றும், அந்த அழிப்பு மகசர் **அ.சா.ஆ. 10** குறியீடு செய்யப்படுகிறது என்றும்,

பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண்.170/2021 **இ.த.ச. பிரிவுகள் 379, 430** முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளதாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.11** குறியீடு செய்யப்படுகிறது என்றும், கைது செய்யப்பட்ட எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான அசோக் லைலாண்ட் லாரி TN

05 R 0839 இவற்றை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும், அந்த படிவம் 91 **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தான லாரி ச.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அவர் தனது புலன் விசாரணையை நிறைவு செய்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 379, 430 ன் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிரான சூழலை தொகுத்து பிரிவு 313(1) (ஆ) ன் கீழ் எதிரியிடம் வினவ எதிரி அவருக்கு எதிரான சாட்சியங்கள் யாவும் பொய் சாட்சி என்றும், வழக்கை குறித்து வினவியபோது பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிப்பதற்கு சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தனர்.

6. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் அரசு தரப்பால் எதிரி மீது இதச பிரிவுகள் 379, 430 ன் கீழ் குற்றச்சாட்டு அனைத்துவித ஐயப்பாட்டிற்கும் அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டதா ? இல்லையா? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

7. இரு தரப்பு வாதங்களையும் கேட்டும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும் பார்க்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் கடந்த 23.04.2020 ம் தேதி காலை சுமார் 06.00 மணிக்கு ராணிப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வேலம் புதிய காலணி பஸ் ஸ்டாப்பிடம் எதிரி TN 05 R 0839 என்ற ASHOK LEYLAND லாரியில் சுமார் 2 யூனிட் ஏரிமண் வேலம் ஏரியில் இருந்து எந்தவித அரசு அனுமதியின்றி



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**

திருடுவதால் இயற்கை கனிமவளம் மற்றும் நீர் ஆதாரம் பாதிக்கும் என்று தெரிந்தே அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி தான் பணம் சம்பாதித்து லாபம் அடைய வேண்டும் என்ற உள்நோக்கத்தில் எதிரி வேலம் ஏரியில் இருந்து ஏரிமண்ணை திருடி எடுத்து வந்துள்ளதாக எதிரி மீது இதச பிரிவுகள் 379, 430 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கு எதிராக சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றசாட்டு நிருபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு தண்டனை வழங்கவேண்டுமென வாதிடப்பட்டது.

8. எதிரி தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் இவ்வழக்கில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரி மீது பொய்யான ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர் எனவும் எதிரி தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் எடுத்துரைத்தார்.

9. இந்த வழக்கில் அ.சா.1 மற்றும் 2 தங்களது முதன்மை சாட்சியத்தில் அவர்கள் உதவி ஆய்வாளருடன் மணல் திருட்டு தொடர்பாக ரோந்து சென்ற போது வேலம் புதிய காலணி பேருந்து நிலையம் அருகே வந்த அசோக் லேலண்ட் TN 05 R 0839 என்ற லாரியில் 2 யூனிட் ஏரிமண் கடத்தி வந்த எதிரியை பிடித்து விசாரித்ததில் அரசு அனுமதியின்றி ஏரி மணலை திருடி வந்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். அந்த வண்டியில் 2



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**

யூனிட் அளவு ஏரி மணல் இருந்ததாகவும் அந்த மணலை கைப்பற்றிய போது அ.சா.1ம், அ.சா.2ம் கைப்பற்றுதல் மகரில் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறியுள்ளனர். மேலும் சம்பவயிடத்தை பார்வையிட்டு உதவி ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக இருந்ததாகவும் கூறியுள்ளனர். அந்த கைப்பற்றப்பட்ட மணலில் ஒரு கிலோ மணல் மாதிரிக்கு எடுக்கப்பட்டு மீத மணலை வேலம் ஏரியில் கொட்டி அழித்ததாகவும், அதற்காக ஒரு அழித்து மகசர் தயார் செய்யப்பட்டதாகவும், அதற்கும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும் கூறியுள்ளனர்.

10. அ.சா.3 உதவி ஆய்வாளர் அ.சா.1 மற்றும் 2 உடன் சம்பவத்தன்று சம்பவயிடம் ரோந்துக்கு சென்ற போது எதிரி லாரியில் ஏரிமணல் கடத்திக்கொண்டிருந்தார் என்றும், சம்பவயிடத்தை விசாரணை செய்து அ.சா.1 மற்றும் 2 முன்பாக பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், மேலும் அதே சாட்சிகள் முன்பாக கைப்பற்றுதல் மகசரில் 2 யூனிட் மணலுடன் இருந்த லாரியை கைப்பற்றியதாகவும், கைப்பற்றிய மணலில் இருந்து 1 கி.கி மணலை மாதிரிக்காக எடுத்து மீதமுள்ள மணலை வேலம் ஏரியில் கொட்டி அழித்ததாகவும், அதற்கு அழிப்பு மகசர் அ.சா.1 , 2 முன்னிலையில் தயார் செய்ததாகவும் அதன் பின்பு நிலையம் வந்து குற்ற எண் 170/2021 ல் சட்ட பிரிவுகள் 379, 430 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், லாரியை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும், பின்பு சாட்சிகளை விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளார்.



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**

11. அ.சா.1 முதல் 3 வரையிலானோர் தங்களது குறுக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் விசாரணை உதவி ஆய்வாளர் தான் என்றும், சம்பவயிடத்தில் பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் குற்ற எண் குறிப்பிட்டு தயார் செய்யப்பட்டது என்றும், பின்பு நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும் கூறியுள்ளனர். ஆனால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே தட்டச்சு செய்யப்பட்டதாக கூறப்படும் பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளதை பார்க்கும் போது உண்மையில் பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் ஆகியவை சம்பவயிடத்தில் தான் தயார் செய்யப்பட்டதா என்பதில் ஐயம் ஏற்படுகிறது.

12. இவ்வழக்கில் ஆய்வாளரின் ஆணையின் பேரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றப்பட்ட மணலில் 1 கிகி மாதிரி எடுத்து மீதத்தை ஏரியில் கொட்டி அழித்ததாக அ.சா.3 கூறியிருந்தாலும் படிவம் 91 மூலம் சமர்ப்பிக்கப்பட்ட வழக்கு சொத்தான லாரியுடன் 1 கி.கி மாதிரி மணல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை பார்வையிலும் ஆய்வாளரின் ஆணையின் பேரில் அழித்ததாக கூறியிருந்தாலும், அதற்கான ஆணையினை நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்பதை பார்க்கையிலும் ஏரி மணலை ஏரியில் கொட்டி அழித்ததற்கான புகைப்படங்களை தாக்கல் செய்யவில்லை என்பதாலும் உண்மையில் மணல் கைப்பற்றப்பட்டதா என்பதை அரசு தரப்பு நீருபிக்க தவறியதாகவே கருதவேண்டியுள்ளது.

13. மேலும் இவ்வழக்கின் சம்பவயிடம் குடியிருப்பு இடம் என்று



Tmt.S.Poornima,
DM-cum-JM, Ranipet

அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டு அவர்கள் சென்ற சமயமான காலை 06.00 மணியளவில் அங்கு தனிநபர்கள் யாரும் இல்லை என்று கூறியிருப்பதும் இவ்வழக்கு சம்மந்தமாக பொதுபணித்துறையினரோ தனி நபரோ புகார் அளிக்கவில்லை என்றும் கூறியிருப்பதும், மாதிரிக்காக எடுக்கப்பட்ட மணலை நீதிமன்றத்தில் சமர்பிக்காததும் அதற்கான உரிய காரணம் அளிக்கவில்லை என்பதை கருத்தில் கொள்ளும்போது எதிரி ஏரி மணல் திருட்டில் ஈடுபட்டார் என்பதும் எதிரியிடமிருந்துதான் மணல் கைப்பற்றப்பட்டது என்பதும் சந்தேகத்திற்குரியதாகிறது.

14. மேற்சொன்ன சாட்சியங்களை பார்க்கும் போது எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டனர் என்று அரசு தரப்பு போதிய சாட்சியங்கள் வாயிலாக நிருபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

15. முடிவாக எதிரி மீது இதச பிரிவுகள் 379, 430 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து எதிரியை விடுதலை செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி ஏற்கனவே எழுதிக்கொடுத்துள்ள பிணை முறியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யவும் உத்தரவிடப்படகிறது.

**வழக்கு சொத்து:**

15. இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சி.பி.எண்.84/2021 ல் கண்டுள்ள வழக்கு சொத்து 1) Ashok Leyland Lorry TN 05 R 0839 என்ற வாகனம்-1 வேலூர் முதன்மை மாவட்ட நீதிமன்ற Return of property order

Crl.M.P No.2811/2024 நாள் 16.08.2021 பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மனுதாரர் சேகர் என்பவர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். அவர் பெற்று சென்ற மேற்படி வண்டியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரே வைத்துக் கொள்ள உத்தரவிடுகிறது.

இத்தீர்ப்புரை என் சொல்லிற்கேற்ப தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 11 ஆம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

SADASIVAM POORNIMA
Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.

பின்சேர்க்கை

அரசு தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. இருசப்பன் |
| அ.சா.2 | திரு. சரவணன் |
| அ.சா.3 | திரு. பாலமுருகன் |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.02.2026 | பார்வை மகசரில் உள்ள அ.சா.1ன் முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 03.02.2026 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1ன் முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | 03.02.2026 | அழிப்பு மகசரில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 17.02.2026 | பார்வை மகசரில் உள்ள அ.சா.2ன் முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | 17.02.2026 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2ன் |

| | | |
|---|---|---|
| | | முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.6 | 17.02.2026 | அழிப்பு மகசரில் உள்ள அ.சா.2ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.7 | 06.03.2026 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | 20.02.2026 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.9 | 20.02.2026 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | 20.02.2026 | அழிப்பு மகசர் |
| அ.சா.ஆ.11 | 20.02.2026 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.12 | 20.02.2026 | படிவம் 91 |

<u>அரசு தரப்பு சான்றுபொருள்கள்</u> – Ashok Leyland Lorry TN 05 R 0839 என்ற எண் கொண்டு லாரி – 1

<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுபொருள்</u> – இல்லை

SADASIVAM POORNIMA
Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.

<u>பின்குறிப்பு</u>

1. வழக்கின் முடிவு காவலருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. எந்த ஒரு சாட்சியையும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**